# இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

# பதவி வெற்றிடங்கள்

**அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்யும் ஒரே நிறுவனமாகும். மேலும் இலங்கையில் தனியார் துறைக்கான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும்.**

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1) முகாமைத்துவ உதவியாளர் (மருந்தாளர்) (MA 2.1) - தரம் III
## MANAGEMENT ASSISTANT (PHARMACIST)

**தொழில் தகைமைகள்:**

(அ) N.V.Q. 5ஆம் நிலைக்குக் குறையாத, இலங்கை மருத்துவ பேரவையினால் மருந்தாளராக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் அத்துடன் பதிவு செய்யப்பட்ட அரச மருந்தகம் / கூட்டுத்தாபனம் / சபை/ கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் மருந்து வழங்குவதில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 01 வருடகால அனுபவம்.

மற்றும்

(ஆ) கணனி அறிவு

**சம்பள அளவு :** ரூபா 37,890/- 375/- x 10, 440/- x 7, 620/- x 4, 825/- x 20 - 63,700/-
(மாதச் சம்பளம் ஏறக்குறைய 115,914.00 ரூபாவாக இருக்கும்)

**வயதெல்லை :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 2) முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) (MA-1-1) - தொழில்நுட்பம் அல்லாத - தரம் III

**தகைமைகள்:**

(அ) கபொத (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் எண்கணிதம் உட்பட்ட பாடங்களில் 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) (i) கபொத (உ/த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) குறைந்தபட்சம் 02 வர்த்தகப் பாடங்களில் (பொது வினாத்தாள் நீங்கலாக) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(ii)கபொத (உ/த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) 03 வர்த்தகப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

(இ) கணனி அறிவாற்றல்

அத்துடன்

(ஈ) அரசாங்கம் / கூட்டுத்தாபனம் / சபை / கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் காசாளராக குறைந்தபட்சம் 03 வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**சம்பள அளவு :** ரூபா 34,890/- 375/- x 10, 440/- x 7, 620/- x 4, 825/- x 20 - 60,700/-
(மாதச் சம்பளம் ஏறக்குறைய 110,458.00 ரூபாவாக இருக்கும்)

**வயதெல்லை :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 3) முகாமைத்துவ உதவியாளர் (இலிகிதர்) (MA-1-1) - தொழில்நுட்பம் அல்லாத - தரம் III

**தகைமைகள்:**

(அ) கபொத (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) (i) கபொத (உ/த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) குறைந்தபட்சம் 02 பாடங்களில் (பொது வினாத்தாள் நீங்கலாக) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(ii)கபொத (உ/த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

(இ) கணனி அறிவாற்றல்

மற்றும்

**சம்பள அளவு :** ரூபா 34,890/- 375/- x 10, 440/- x 7, 620/- x 4, 825/- x 20 - 60,700/-
(மாதச் சம்பளம் ஏறக்குறைய 110,458.00 ரூபாவாக இருக்கும்)

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாதாந்த வருகை ஊக்குவிப்புத்தொகை, பயன்படுத்தப்படாத விடுமுறையை பணமாக்குதல், வருடாந்த போனஸ், நலத்திட்ட சலுகைகள், மருத்துவ சலுகைகள் மற்றும் ஊழியர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கான மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் உட்பட கவர்ச்சிகரமான சலுகைகளைப் பெற தகுதியுடையவர்கள்.

- சகல விண்ணப்பதாரர்களும் நிகழ்நிலையில் (online) விண்ணப்பிக்க வேண்டும். நிகழ்நிலை விண்ணப்ப இணைப்பு 2026-01-25ஆம் திகதி முதல் 2026-02-09ஆம் திகதி வரை திறந்திருக்கும். விண்ணப்பதாரர்கள் 2026-02-09ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிகழ்நிலை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
- விண்ணப்பங்களை www.spc.lk இணையதளத்தில் உள்ள இணைப்பின் ஊடாக நிகழ்நிலையில் அல்லது வழங்கப்பட்டுள்ள QR குறியீட்டின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்
  - முகாமைத்துவ உதவியாளர் (மருந்தாளர்) (**MA 2.1**) - https://forms.gle/V8jRDZDS7h5263X28
  - முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) (**MA 1.1**) - https://forms.gle/mnyA5k1X2VVjBTBD8
  - முகாமைத்துவ உதவியாளர் (இலிதர்) (**MA 1.1**) - https://forms.gle/YcsdiVAYBnRxv1hVA
- நிகழ்நிலை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது, பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் வேளையில் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டின் PDF அல்லது JPG பிரதிகளை இணைக்க வேண்டும்.
  - முகாமைத்துவ உதவியாளர் (மருந்தாளர்) (**MA 2.1**) - 2,300.00 ரூபா
  - முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) (**MA 1.1**) - 1,675.00 ரூபா
  - முகாமைத்துவ உதவியாளர் (இலிதர்) (**MA 1.1**) - 1,600.00 ரூபா
- விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் பின்வருமாறு மீளளிக்கப்படாத பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

  **வங்கிக் கணக்குத் தகவல்கள்:**
  - **Account Holder** : State Pharmaceuticals Corporation of Sri Lanka
  - **Bank & Branch** : National Savings Bank, Narahenpita
  - **Account No.** : 1-0064-04-01196
- கொடுப்பனவுப் பற்றுச்சீட்டில் விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- பதிவிறக்கம் செய்யப்பட்ட நிகழ்நிலை விண்ணப்பம், முறையாக சான்றுபடுத்திய ஆவணங்களின் பிரதிகள் மற்றும் கொடுப்பனவு பற்றுச்சீட்டை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு பதில் உபொமு (மனிதவளம் மற்றும் நிர்வாகம்), ''மெஹெவர பியச'', 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
- அரச துறை அமைப்புகள் / கூட்டுத்தாபனங்கள் / சபை / நியதிச்சட்ட நிறுவனத்தின் ஊழியர்கள் விண்ணப்பத்தின் வன் பிரதியை குறித்த நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.
- மேற்கூறிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதாகவும் மற்றும் முழுமையானதாகவும் உள்ளதை விண்ணப்பதாரர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.
- ஒருமுறை சமர்ப்பித்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களில் மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.
- விண்ணப்பத்தின் வன் பிரதியில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**பொதுவான நிபந்தனைகள்**

- சகல விண்ணப்பதாரர்களும் சிறந்த நன்னடத்தை உடையவர்களாகவும் மற்றும் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உள்ளாகாதவர்களாக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு உத்தேசிப்பதானால், ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.
- சகல விண்ணப்பதாரர்களும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்ற விருப்பமுடையவராக இருக்க வேண்டும்.
- இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பிறகு, விண்ணப்பாதாரர்கள் ஒரு போட்டிப் பரீட்சைக்கு அமர வேண்டும் மற்றும் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நடத்தும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும்.


**பதில் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்)**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியச'', 16ஆம் தளம்,**
**41, கிருள வீதி,**
**கொழும்பு 05.**

**தொலைபேசி: 011 2320356/9**